
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1129

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# இது பெரியார் மண்

ர.பிரகாசு

50

பகுத்தறிவுக் கொள்கைகளை முழுமையாகக் கடைப்பிடிக்கும் ஊர்களைப் பற்றிய பதிவாக ஒரு தொடர்.






## போராளிகளுக்கு மறைவேது?

நீதிக்கட்சி காலத்தில் இருந்தே அரசியல் ஈடுபாடு கொண்டிருந்த இருகூர் என்.பி.தீவிரம், பெரியாரின் சுயமரியாதைக் கொள்கைகளால் வெகுவாக ஈர்க்கப்பட்டார். அதற்கு அவரது ஊரில், அப்போது நிலவிய சாதிக்கொடுமைகளே மிக முக்கியக் காரணமாக இருந்தன. ஊர்த்தெருவுக்குள் நடப்பது தொடங்கி விதவிதமான பல தீண்டாமைக் கொடுமைகள் அங்கு நிலவி வந்தன. தீவிரத்திற்கு அவற்றை எதிர்க்கும் துணிச்சலை விதைத்தது சுயமரியாதை இயக்கம். அதனால் 1930-களிலேயே மிகத் தீவிரமான சுயமரியாதை இயக்கத் தொண்டராக மாறினார். இருகூர் பகுதியை சுயமரியாதை இயக்கத்தின் ஒரு வலுவான கோட்டையாக்கினார். ஆலையில் பணிபுரிந்தவர் என்பதால், சக ஆலைத் தொழிலாளர்கள் மத்தியிலும் பகுத்தறிவுச் சிந்தனைகளை விதைத்தார்.

இருகூரில் சுயமரியாதை இயக்கக் கருத்துகளைப் பரப்புவதிலும், மூடநம்பிக்கைகளுக்கு எதிரான போராட்டங்களிலும் முன்னின்று செயல்பட்டவர், சாதி மறுப்புத் திருமணங்களையும் ஊக்குவித்தார்.

இருகூர் மட்டுமின்றி, குனியமுத்தூர், புளியகுளம் உள்ளிட்ட சுற்றுவட்டார பகுதிகளில் தனது உறவினர்களையும் ஒரே இயக்கமாக்கிச் செயல்பட வைத்தார். காரமடை அரங்கநாதர் கோயில் தேர்த் திருவிழாவில், 'கவாளம் எடுத்தல்' என்ற நிகழ்ச்சி இடம்பெறும். இதில், சாமியாடி வரும் நபர் மென்று தரும் வாழைப்பழத்தை, பக்தர்களுக்குப் பிரசாதமாக வழங்குவது வாடிக்கையாக இருந்தது. இதை பிரசாதமாக உட்கொண்டால், குழந்தை இல்லாதவர்களுக்கும் குழந்தை பிறக்கும் என்ற மூடநம்பிக்கை நிலவியது அக்காலத்தில். அதற்கெதிராக தீவிரப் பிரச்சாரம் மேற்கொண்டார் தீவிரம்.


என்.பி.தீவிரம்

1938, 1949 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டங்களில் கோயம்புத்தூர் மண்டலத்திலிருந்து மிகத்தீவிரமாகப் பங்கெடுத்தார். இதற்காக இவர் சிறைத்தண்டனையும் அனுபவித்துள்ளார். மொழிப்போர் தியாகிகளுக்கான ஓய்வூதியம் பெற்றவர். பெரியார் கோவைக்குச் செல்கிறார் என்றால் நிச்சயம் அவரோடு என்.பி.தீவிரம் இருப்பார். தீவிரம், தீவிரமாக இயங்கிய காலகட்டத்தில் பெரியாரும் இருகூருக்கு வருகை தந்துள்ளார். குறிப்பாக, 31.05.1942 அன்று இருகூரில் நடைபெற்ற ஆதி திராவிடர் மாநாட்டைத் தொடங்கிவைக்க பெரியார் அழைக்கப்பட்டார். 'கடவுளும் மதமும்' என்ற தலைப்பில், அம்மாநாட்டில் பெரியார் ஆற்றிய உரை பின்னர் நூலாகவும் வெளிவந்தது.

இருகூரில் பெரியாரிய பிரச்சாரத்துக்கு வலுசேர்க்கும் வகையில், 'பகுத்தறிவு படிப்பகம்' ஒன்றை அமைக்க முயற்சி மேற்கொண்டார். 03.06.1967 அன்று அன்றைய கல்வி மற்றும் தொழில்துறை அமைச்சராக இருந்த நாவலர் நெடுஞ்செழியனை அழைத்துவந்து, இந்தப் படிப்பகத்தைத் திறந்துள்ளார் தீவிரம். பெரியார் மறைவுக்குப் பிறகும், தீவிரம் தனது இயக்கப் பணியைத் தொய்வில்லாமல் தொடர்ந்தார். அதற்காக 17.04.1988 அன்று தீவிரத்துக்கு திராவிடர் கழகத்தின் சார்பில் பாராட்டு விழா எடுக்கப்பட்டது. திராவிடர் கழகத்தின் அன்றைய கோவை மாவட்டச் செயலாளராக இருந்த கு.இராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் ஆசிரியர் கி.வீரமணி கலந்துகொண்டு, இருகூர் தீவிரத்தின் இயக்கப் பணிகளைப் போற்றி உரையாற்றினார்.

அவர் மறைந்து 30 ஆண்டுகளுக்கும் மேலாகிவிட்டன. ஆனால், அவர் மறைவுக்குப் பிறகு பிறந்த தலைமுறையினருக்கும் 'தீவிரம் அய்யா' என்று நினைவில் நிற்கிறார் இன்றும். அவர் உருவாக்கி வைத்த பகுத்தறிவுப் படிப்பகம் இன்றும் இயங்கிக் கொண்டிருக்கிறது. பகுத்தறிவு படிப்பகத்துடன் சேர்த்து உருவாக்கப்பட்ட சர்.ஏ.டி.பன்னீர்செல்வம் நினைவு விளையாட்டுக்குழு, 70 ஆண்டுகளைக் கடந்து இன்றும் இருகூரில் பொங்கல் விழாவை நடத்திக்கொண்டிருக்கிறது. ஒரு நூற்றாண்டுக்கு முன்பு என்.பி.தீவிரம் பற்றவைத்த பகுத்தறிவு நெருப்பு, இன்றும் சுடர்விட்டு எரிகிறது!

...பயணம் தொடரும்

## சமூக நீதிப் பயணத்தைத் தடுக்க முடியாது!

முன்னாள் நீதிபதி ஹரிபரந்தாமன் அவர்கள், பொதுநல மற்றும் சமூக நீதி சார்ந்த பிரச்சினைகளில் தெளிவான நிலைப்பாட்டுடன் கருத்துகளைத் தெரிவித்து வருபவர். எந்த அரசியல் கட்சியாக இருந்தாலும் தவறு என்றால், அதைத் திறந்த மனத்துடன் விமர்சிக்கும் சமரசமற்ற, நேர்மையான குரலாகப் பல மேடைகளில் அவரின் குரல் ஒலித்து வருகிறது.

சமூக நீதி, சமத்துவம் மற்றும் ஜனநாயக மதிப்புகளுக்காகக் குரல்கொடுத்து வருபவர்கள் என்றால், அவர்களை அச்சுறுத்தி முடக்குவதை வழக்கமாகக் கொண்டவர்கள், தற்போது அவரை மிரட்டத் தொடங்கி இருக்கின்றனர்.

மதுரை, திருப்பரங்குன்றம் விவகாரத்தில் பொது அமைதியைச் சீர்குலைக்கும் வகையிலான தீர்ப்பை, அனைத்து ஜனநாயக சக்திகளும் விமர்சனம் செய்திருந்தனர். சங் பரிவாரங்களின் அடாவடிகளுக்கு எதிராக, மத நல்லிணக்கத்தை வலியுறுத்தி கூட்டங்களை நடத்தினர்.

ஓய்வுபெற்ற நீதிபதி ஹரிபரந்தாமன் அவர்களும், 'சட்டத்தின் வழியில் தீர்ப்பு வழங்கப்படவில்லை' என விமர்சித்திருந்தார். இப்படியான சூழலில், அவர்மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர நடைபெற்ற முயற்சிக்கு, தமிழ்நாடு அரசு தலைமை வழக்கறிஞர் அனுமதி அளிக்கவில்லை. என்றாலும், சமூக நீதிக்காகக் குரல்கொடுப்பவர்களை வழக்குகள்மூலம் மௌனப்படுத்த முயல்வதற்கு, ஜனநாயக சக்திகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. 'இத்தகைய வழக்குகள் பதிவு செய்யப்படுவது சாதாரண நிகழ்வு அல்ல; திட்டமிட்ட முயற்சி' எனக் கண்டனத்தைப் பதிவு செய்துள்ளார், மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் பேராசிரியர் எம்.ஹெச்.ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ.

இப்படியான அச்சுறுத்தல்கள்மூலம் சமூக நீதிச் செயற்பாட்டாளர்களின் பயணத்தை ஒருபோதும் தடுத்து நிறுத்த முடியாது என்பதை தமிழ்நாட்டின் நூற்றாண்டுகால வரலாறு சொல்லும்; அது என்றும் தொடரும்.

## ஃப்ளாஷ்பேக்



### இளைஞர் அணி நாட்களின் உற்சாகம்!


பொ.ஜெயபாலன்

1986-ஆம் ஆண்டில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழா, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்றது. அப்போது, சேப்பாக்கம் பகுதி 86-வது வட்ட இளைஞர் அணிச் செயலாளராக இருந்த நான், தலைவரிடம் கட்சி வளர்ச்சி நிதி அளித்து வாழ்த்தினேன். மிகுந்த எழுச்சியோடு நடைபெற்ற அந்த பிறந்தநாள் விழாவில், தமிழ்நாடு முழுவதிலும் இருந்து வந்து கழகத்தினர் திரளாகக் கலந்துகொண்டு தலைவரை வாழ்த்தினார்கள். தலைவர் எங்களையெல்லாம் ஊக்கப்படுத்தி அனுப்பி வைத்தார். மறக்க முடியாத கழக நாள்.

– பொ.ஜெயபாலன்,
பதிப்பாசிரியர் – கழகக் கண்மணி இதழ்,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

# பொய்ப்பெட்டி

கோவி.லெனின்

100

"கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்..."



## அமைதியைக் குலைக்கும் மதவாத சக்திகள்!

**'திருப்பரங்குன்றம் கோயிலுக்குப் போய் வந்தேன், வருத்தமாக இருந்தது' என்று மதுரையில் நடந்த தேசிய ஜனநாயகக் கூட்டணி கூட்டத்தில், பிரதமர் மோடி பேசியிருக்கிறாரே?**

மோடிக்கு மட்டுமா வருத்தம்? அமித் ஷா, நயினார் நாகேந்திரன், அண்ணாமலை, ஹெச்.ராஜா, தமிழிசை உள்ளிட்ட பா.ஜ.கவினர் எல்லாருக்கும் வருத்தம் இருக்கத்தான் செய்கிறது. திருப்பரங்குன்றம் கார்த்திகை தீபம் ஏற்றும் விழாவை வைத்து, தமிழ்நாட்டில் இரண்டு மதங்களுக்கிடையே கலவரத்தைத் தூண்டி, அதில் அரசியல் குளிர் காயலாம் என்று அவர்கள் போட்ட திட்டமும் அதற்காகத் திட்டமிடப்பட்டு போடப்பட்ட வழக்கையும் மதநல்லிணக்கத்தில் உறுதியாக இருக்கும் திராவிட மாடல் அரசின் முதலமைச்சர் மிகத் திறமையாகக் கையாண்டு, உண்மையான பக்தர்கள் மனம் குளிர, எப்போதும் தீபம் ஏற்றப்படும் இடத்தில் கார்த்திகை தீபம் ஏற்றிடச் செய்தார். மதுரை மண்ணில் எப்போதும் போல சமய நல்லிணக்கத்தைப் பேணி பாதுகாத்துவிட்டதால், மோடிக்கும் அவரது கட்சியினருக்கும், கலவரம் நடக்கவில்லையே என்ற வருத்தம் இருக்கத்தானே செய்யும்? குஜராத்தில் மோடியின் ஆட்சிக்காலத்தில் நடந்த மதரீதியான வன்முறைதானே பா.ஜ.க.வுக்கு அங்கு அரசியல் அடித்தளமாக அமைந்தது?

தமிழ்நாட்டில் அப்படிப்பட்ட நிலையை, பா.ஜ.க.வால் உருவாக்க முடியாத அளவுக்கு இது பெரியார் மண்ணாக, திராவிட உணர்வுள்ள நிலமாக, அனைத்து மதத்தினரின் அன்பு நிறைந்த இடமாக இருக்கிறது. திருப்பரங்குன்றம் அமைந்துள்ள மதுரை மண்ணில், சித்திரைத் திருவிழாவில் கள்ளழகர் ஆற்றில் இறங்குவதையும் மீனாட்சியம்மன் திருமணத்தையும் காண வரும் இந்து பக்தர்களுக்கு, இஸ்லாமியர்கள் நீர் மோர் உள்ளிட்ட பானங்களை வழங்கியும் அம்மனுக்குப் பட்டுத்துணி வழங்கியும் மரியாதை செய்வார்கள். சிக்கந்தர் தர்கா கந்தூரி விழாவில், இந்துக்கள் பங்கேற்பது வழக்கமாக உள்ளது. கிறிஸ்தவ தேவாலயத்திலும் கிறிஸ்துமஸ், ஈஸ்டர் உள்ளிட்ட விழாக்களில் அனைத்து மதத்தினரும் பங்கேற்பது வழக்கமாக உள்ளது.

மதுரைப் பொதுக்கூட்டத்தில், மோடி தனக்கு வருத்தமாக இருக்கிறது எனப் புலம்பிவிட்டுச் சென்ற மறுநாள், ரமலான் மாதத்தை யொட்டி மதுரையில் இஸ்லாமியப் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான நோன்பு திறப்பு நிகழ்ச்சியை, மீனாட்சியம்மன் கோயில் அறங்காவலர் குழு உறுப்பினரான மீனா அன்புநிதியும் அவரது குடும்பத்தினரும் நடத்தினர். இதில் மதப் பாகுபாடின்றி பலரும் பங்கேற்றனர். ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக மீனா அன்புநிதி குடும்பத்தார் இந்த நோன்பு திறப்பு நிகழ்ச்சியை நடத்தி வருகின்றனர். இது மதுரையின் மத நல்லிணக்கத்திற்கு ஓர் அடையாளம். அப்படிப்பட்ட மதுரையிலும் தமிழ்நாடு முழுவதிலும் கடந்த ஐந்து ஆண்டுக்கால திராவிட மாடல் ஆட்சியில், 4,000 கோயில்களுக்குக் குடமுழுக்கு விழா சிறப்பாக நடத்தப்பட்டுள்ளது. பா.ஜ.கவினர் மற்றும் அதன் கிளை அமைப்பினரின் ஆக்கிரமிப்பில் இருந்த ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் மீட்கப்பட்டுள்ளன. கிராமப் பூசாரிகள் முதல் பெருங்கோயில் அர்ச்சகர்கள் வரை அனைவருக்குமான நலத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இந்து விரோதி என்று தி.முக.வை பா.ஜ.க.வினர் சொன்னால், அவர்கள் குடும்பத்தினரே திட்டுகிற நிலைமை உருவாகியுள்ளது. மோடிக்கும் அவரது கட்சியினருக்கும் கொஞ்சநஞ்ச வருத்தமா இருக்கும்?

...வினா தொடரும்.

## கருவூலம்

### வங்கிகள் தேசியமயம்!

1956-ஆம் ஆண்டு மே மாதம், திருச்சியில் நான்கு நாட்கள் நடைபெற்ற கழகத்தின் இரண்டாவது மாநில மாநாட்டில், வங்கிகள் தேசியமயமாக்கப்பட வேண்டும் எனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தனிப்பட்டோர் வசமுள்ள பெருந்தொழில்களையும் வங்கிகளையும் தேசியமயமாக்கி, அந்த நிறுவனங்களின் சொத்துகளையும் வருவாய்களையும் அந்தந்த மாநிலங்களிலேயே பயன்படுத்திக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் என அந்தத் தீர்மானம் வலியுறுத்தியது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131